Prepp
Your Personal Exams Guide

தொகுதி – II மற்றும் தொகுதி – II-A

# கட்டாய தமிழ் மொழி தகுதித்தாள் (பத்தாம் வகுப்பு தரம்)

## தாள் – I

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

அறிவுரைகள்

(கீழ்க்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-I இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் 40 பெற்றால் மட்டுமே தாள்-II விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும்.
2. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காக தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.
3. விண்ணப்பதாரர்கள், இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பை தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட கட்டத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.
5. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவு எண்ணை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே எழுத வேண்டும். இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களின் விடைத்தாள் தொகுப்பு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரருக்கான அறிவுரையின் பத்தி 12-B-இன் படி செல்லாததாக்கப்படும்.
6. தேர்வர்கள் விடையளிக்கும் போது வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.
7. தேர்வர்கள் இந்த வினா-விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.
8. விண்ணப்பதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
9. விண்ணப்பதாரர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், ‘அனுப்புநர்’, ‘பெறுநர்’ முகவரிகளில் அ ஆ இ அல்லது எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுதவேண்டும்.

Prepp
Your Personal Exams Guide

## அலகு — 1 (அ)

*குறிப்பு:* i) கொடுக்கப்பட்ட தமிழ் பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 1 | தமிழகத்தில் வற்றாத நதிகள் இல்லை. தமிழகம் தனது தேவைக்கான நீரை வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவ மழைகளிலிருந்து பெறுகிறது. தென்மேற்கு பருவ மழைப்பொழிவு அபரிமிதமாக இருந்தால், காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலுள்ள கர்நாடக அணைகள் நிரம்பிவிட்டால் தமிழகத்தில் காவிரி ஆற்றில் நீர் பெருகும்.<br><br>தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்குப் பருவ (அக்டோபர்-டிசம்பர்) மழையாகும்.<br><br>வடகிழக்குப் பருவமழை நீர்த் தேக்கங்களிலும், கண்மாய்களிலும் மற்றும் ஏரிகளிலும் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர். தமிழக வேளாண்மைக்கான நீரை வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவை வழங்குகின்றன. தமிழகத்தில் 2,239 வாய்க்கால்கள் ஏறத்தாழ 9,750 கிலோமீட்டர் தூரம் பாய்கின்றன. சிறு ஏரிகள் 7,985-ம் பெரிய ஏரிகள் 33,142-ம் உள்ளன. திறந்தவெளி கிணறுகள் 15 இலட்சம் உள்ளன. இவையல்லாது 3,54,000 ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆதாரங்களைக் கொண்டே தமிழகத்தில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகிறது. |
| | |

## அலகு — 1 (ஆ)

*குறிப்பு:* ii) கொடுக்கப்பட்ட ஆங்கில பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும்.

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 2 | Sir Thomas Munro the Governor of Madras Presidency (1820-27) was highly responsible for the introduction of western education in Madras Presidency. He appointed a committee to conduct a statistical survey of the condition of education. The Education Commission of Munro recommended the creation of two principal schools (Collectorate and Tahsildare Schools) in each district. In 1835 Lord William Bentinck passed a resolution favouring the introduction of Western system of education in India. Wood's Despatch of 1854 introduced the Department of Public instruction in Madras Presidency. Grant-in-aid was given to all schools. The Madras University was founded in 1857. It was the first University in Tamil Nadu under the British rule. In 1882 the local Boards Act was passed. The Board was empowered to open new schools and to get grants from the government. By 1938, all subjects except English were taught in Tamil in schools. |

www.prepp.in



Your Personal Exams Guide

*குறிப்பு:* i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.

**(1 × 10 = 10)**

<table>
<tr>
<td>Q.No.<br>3</td>
<td>திராவிட மொழிக் குடும்பம் என்னும் பகுப்பு உருவாவதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர் பலரிடையே நிலவி வந்தது. இம்மொழிகளில் வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்பட்டதால் 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும், அதிலிருந்தே மற்ற மொழிகள் தோன்றி வளர்ந்தன எனவும் அறிஞர் கருதினர். அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன்முதலில் குறிப்பிட்டார். தொடர்ந்து, 1816-ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம் முதலானோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>முதன் முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனவும் பெயரிட்டார். இதனையொட்டி, மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார். மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.<br><br>1856-இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார். இதனை மேலும் உறுதிப்படுத்தப் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளையும் எடுத்துரைத்தார்.<br><br>திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலியவை தென்திராவிட மொழிகள் எனவும், தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும், பிராகுயி முதலானவை வட திராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.</td>
</tr>
<tr>
<td colspan="2"></td>
</tr>
</table>

## அலகு — 3

*குறிப்பு:* i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்.

**(5 × 2 = 10)**

| Q.No. | |
|---|---|
| 4 | பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக.<br><br>காடுகளில் வளரும் மூங்கிலில் வண்டுகள் துளையிடும். அவற்றின் வழியாகக் காற்று வீசும்போது இன்னிசை எழும்பும். இதனைக் கேட்டு மகிழ்ந்த முன்னோர் அமைத்தவையே குழல்கள். வேய்ங்குழல், புல்லாங்குழல் என்றும் அழைப்பர். கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.<br><br>வலம்புரிச் சங்கு, இசைக் கருவிகளில் ஓர் இயற்கைக் கருவி. சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் <u>பணிலம்</u> என்று குறிப்பிட்டுள்ளனர்.<br><br>சாலரா, பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கும். ஒன்றோடு ஒன்று பொருத்தியும் விளிம்பின் மீது தட்டியும் தாளத்தின் தேவைக்கு ஏற்ப இசைப்பர். இதனைப் பாண்டில் எனவும் அழைப்பர்.<br><br>'தப்பு' என்னும் பெயரில் வழங்கப்பட்டுவரும் பறை, தோற்கருவியாகும். பழங்காலத்தில் செய்திகளைத் தெரிவிக்கக் கோட்பறையை முழக்கினர். பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது <u>ஆகோட்பறையை</u> முழக்குவர். |
| 1. | சிலம்பு குறிப்பிடும் குழல் வகைகளைக் குறிப்பிடுக. |
| 2. | "பணிலம்" எனக் குறிக்கப்படும் இசைக்கருவி எது? |
| 3. | காற்றுக் கருவியாகக் கூறப்படும் இன்னிசைக் கருவி யாது? |
| 4. | ஆகோட்பறையின் பயன் என்ன? |
| 5. | 'சாலரா' வின் மற்றொரு பெயர் என்ன? |

Prepp
Your Personal Exams Guide

## அலகு — 4

*குறிப்பு:* i) கொடுக்கப்பட்ட சுருக்க குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | மொழிபெயர்ப்பு – அறிவை பெற வழி – தொழில்நுட்பம்; மனித வளம்; உலகளாவிய தன்மை; வேலைவாய்ப்பு ஆகியவை வளரும் – பண்பாடு, கலை, தொழில் பெருகும் – மொழிபெயர்ப்புக்கான வாய்ப்புகள் பெருகியுள்ளன – உலக இலக்கியம் பொது அனுபவமாகிறது – மொழிவேலியை அகற்றும் பணியை மொழி பெயர்ப்புச் செய்கிறது. |
| **விடை** | |

## அலகு — 5

*குறிப்பு:* **i)** திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைக.

**ii)** கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** கொடுக்கப்பட்ட வினாவிற்கு 300 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | |
|---|---|
| Q.No. 6 | 'திருவள்ளுவர் கூறும் புறங்கூறாமை' – கட்டுரை வரைக. |
| Q.No. 7 | மனிதனுக்கு மான உணர்ச்சி வேண்டும் என்பதை வள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார்? |
| Q.No. 8 | உயிர்கள் மீது அன்பு கொள்வதை அருளுடைமை வழி வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்? |
| Q.No. 9 | பழைமை என்ற அதிகாரத்தின் மூலம் வள்ளுவர் வலியுறுத்தும் நட்பு குறித்தக் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. |
| Q.No. 10 | திருக்குறள் 'வான் சிறப்பு' மூலம் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வழிபாட்டையே போற்றினர் என்பதை நிறுவுக. |
| | |

Prepp
Your Personal Exams Guide

## அலகு — 6

*குறிப்பு:* i) கடிதம் வரைதல்

ii) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | |
|---|---|
| Q.No. 11 | தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் 'மெய்நிகர் அருங்காட்சியகம்' அமைத்திட வேண்டிய தேவை குறித்துத் திட்ட மதிப்பு அறிக்கை ஒன்றை வரைக. |
| Q.No. 12 | தமிழ் ஆட்சி மொழி முனைப்புத் திட்டத்தை செயல்படுத்தும் விதத்தில் கோப்புகள் தமிழில் கையாளப்படுகிறதா? என்பதை அறிய கல்லூரி கல்வி இயக்குநர் எழுதும் கடிதத்தைத் தயார் செய்க. |
| Q.No. 13 | தமிழர்த்திருநாள் தைப்பொங்கல் 2023 – அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசாக தலா 1 கிலோ பச்சரிசி மற்றும் 1 கிலோ சர்க்கரையுடன் ரூ. 1,000/- பரிசுத் தொகையும் வழங்கக் கோரி அரசாணைக் கடிதம் வரைக. |
| | |

## அலகு — 7

*குறிப்பு:* i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பகுதியிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பகுதிக்கும் நான்கு மதிப்பெண்

iv) ஐந்து பிரிவுக்கும் சேர்த்து இருபது மதிப்பெண்

**(4 × 5 = 20)**

| | |
|---|---|
| Q.No. 14 | பிழைநீக்கி எழுதுக : |
| | (1) தனி சிறப்புக் காண்போமே இனி |
| | (2) அதற்கு கிழக்குப் பகுதிக்கு போ |
| | (3) தாமரை பாதம் ஓடிப் போனார் |
| | (4) கூவா குயில் ஓடா குதிரை வீசாத் தென்றல் |
| | |

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

| | | |
|---|---|---|
| Q.No. 15 | எதிர்மறை வாக்கியமாக மாற்றுக : | |
| | (1) | பசி வந்தால் சோர்வு வரும் |
| | (2) | ஆர்வம் குன்றினால் வெறுப்பு வரும் |
| | (3) | அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சாகும் |
| | (4) | சிறுதுளி பெரு வெள்ளமாகும் |
| Q.No. 16 | பிரித்தெழுதுக. | |
| | (1) | மூதூர் |
| | (2) | குறளின்பம் |
| | (3) | மற்றொன்று |
| | (4) | பல்லியம் |
| | | |
| Q.No. 17 | பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க. | |
| | (1) | விருப்பு வெறுப்பு |
| | (2) | அல்லும் பகலும் |
| | (3) | ஈடு எடுப்பு |
| | (4) | ஆடல் பாடல் |
| | | |
| Q.No. 18 | கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக : | |
| | (1) | கட கட |
| | (2) | மாறி மாறி |
| | (3) | கூடக் கூட |
| | (4) | கீச் கீச் |
| | | |

Prepp Your Personal Exam Guide